மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விரிபாட்சிபுரத்தில் 37.32 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு 26—12—1966-ல் முதல்வரிடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டடம் கட்டுவதற்கு எட்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் கட்டடம் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த ரூ. 8½ லட்சம் இப்பொழுது வசூல் ஆகியுள்ளதா அல்லது சர்க்கார் கட்டடத்திற்காக ஒதுக்கியுள்ளதா? அப்படியில்லையென்று சொன்னால் இப்பொழுது வரையில அதற்கான பணம் எவ்வளவு உள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கம் கட்டடத்திற்காகப் பணம் ஒதுக்குவது என்ற முறையில் ரூ. 8½ லட்சம் கல்லூரி கட்டடத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

புதை சாக்கடைத் திட்டம்.

*** 146 வினா—திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்திற்கு, பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி கோரினார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டத்தைப் புலனாய்வு நடத்துவதற்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. இன்னும் புலனாய்வு வேலைகள் முடிவு பெறவில்லை. திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றம் வடிகால் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்குமாறு கேட்டுள்ளது. புலனாய்வு வேலைகள் முடிந்து வரைவு மதிப்பீடுகள் வந்ததும் நிதியுதவி அளிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆ. கு. சுப்பையா : திருச்சிராப்பள்ளி நகர சாக்கடை வடிகால் திட்டத்தை நிறைவேற்றியாகவேண்டும் என்று கடனாகவோ அல்லது மான்யமாகவோ உதவி கேட்டார்கள். அது பற்றிய பரிசீலனை இந்த ஆண்டே முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரவேற்பில் 3—4—1967 அன்று திருச்சி நகரமன்றம் அரசாங்கத்தினிடமிருந்து நிதி உதவி கேட்டிருக்கிறது. அதுபற்றி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் சர்க்கார் மத்தியிலும், மாநிலத்திலும், நகராட்சி மன்றங்களிலும் இருந்தும், இது போன்ற பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படாததற்கு என்ன காரணம் என்று இந்த அரசினருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடந்த அரசாங்க நடவடிக்கைகள் பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. இனிமேல் இதுபற்றிய விவரங்கள் தீவிரமாக கவனிக்கப்படும்.

திரு. எம். பூபதி : சுகாதாரத்தை பேணிப் பாதுகாக்க உதவும் கீழ் சாக்கடைத் திட்டத்தை 50 ஆயிரமும் அதற்கும் அதிகமான பேர்கள் ஜனத்தொகை கொண்ட நகராட்சி மன்றங்களுக்கு விஸ்தரிப்பதுபற்றி சர்க்கார் யோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தை நகராட்சிமன்றங்களுக்கு விஸ்தரிக்க சர்க்கார் மிகவும் ஆவலோடு இருக்கிறது. நிதிப் பற்றாக்குறையின் காரணமாகத்தான் இது தற்பொழுது பரிசீலனை செய்ய முடியாத நிலையில் இருக்கிறது.

1967 ஜூலை 3]

திரு. தோ. மு. நல்லசாமி : சார், இந்த திருச்சி கீழ் சாக்கடைத் திட்டத்திற்காக ஆராய்ச்சி நடந்து வருவதாகச் சொன்னார்கள், நிதி உதவி கோருகிறார்கள் என்றும் சொன்னார்கள். அந்த நிதியை மானிய மாகவோ அல்லது கடனாகவோ இந்த ஆண்டே கொடுக்க நிதி ஒதுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? மூ.ப. 9-30

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படவில்லை.

*** 147 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதிப்பிற்குரிய பொதுச்சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா.

(அ) மதுரை நகரத்தில் பாதாள சாக்கடை விஸ்தரிப்புத் திட்டத்திற்கு மதுரை நகரவை ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிடம் கடன் கோரி விண்ணப்பம் செய்துள்ளதா?

(இ) அதை உத்திரவாதம் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, மதுரை மாநகர் வார்டுகள் பிரிக்கப்பட்டு விஸ்தரிக்கப்படும்போது, பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படாவிட்டால், தொத்து நோய்கள் வருகின்றன. ஆகவே, பாதாள சாக்கடைத் திட்டத்தை விஸ்த்தரிக்க சர்க்கார், மானியமோ கட்னோ கொடுத்து அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : பரிசிலனை செய்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : புதை சார் சாக்கடைத் திட்டத்தை வற்புறுத்தி நம் மாநிலத்தில் எத்தனை நகர மன்றங்களிலிருந்து கோரிக்கை வந்திருக்கிறது? நாம் கொடுக்கப் போகும் மானியத் தொகை எவ்வளவு? அவர்களுக்கு எந்த அளவுக்குக் கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதி க்பாட்சா : மூலக் கேள்விக்கும் அங்கத்தினர் கேட்கும் கேள்விக்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் கொடுக்கலாம்.

திரு. மா. இராசாங்கம் ; சார், மதுரை நகர சபை கோரியிருக்கும் கடன் தொகையைக் கொடுக்க சர்க்காருக்கு ஆட்சேபனை இல்லை என்று நினைக்கிறேன். அதற்கு என்ன நிபந்தனை என்று அறியலாமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : சர்க்கார் கொடுப் பதில்லாமல், லைஃப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் கடன் கொடுப்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் உறுப்பினர் என்று கருதுகிறேன்.

The Life Insurance Corporation of India have agreed to grant loans to Municipalities for their Water Supply and Drainage Schemes subject to the following conditions:—

(i) The Municipality to find from its own resources and/or by subvention or loan from the State Government at least 331/3 per cent of the cost of the Water-Supply and Drainage Scheme.